முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 67, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

67—

தடுப்பு அணை

***31456—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம், அமராவதி ஆற்றின் குறுக்கே சிறிய தடுப்பு அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அமராவதி ஆற்றில் தாராபுரத்திற்கு மேலே 9 அணைக்கட்டுகளும், கீழே 9 அணைக்கட்டுகளும் உள்ளன. இதில் தாராபுரம் நகராட்சிக்காக அமராவதி ஆற்றில் குடி தண்ணீர் எடுக்கும் இடத்திற்கு மேலே சுமார் 1/2 கிலோமீட்டர் தூரத்தில் கொழிஞ்சிவாடி அணை உள்ளது. இப்பகுதிக்குக் கீழே 6 கிலோமீட்டர் தூரத்தில் நஞ்சைத்தலையூர் அணைக்கட்டு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே குறுகிய தூரத்தில் இன்னுமொரு Check dam கட்ட வேண்டுமானால், அதன் பயன்பாடு மற்றும் பயன் செலவு விகிதம் ஆகியவற்றை ஆராய்ந்த பின்பு இதைப்பற்றி அரசு கனிவுடன் முடிவெடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2004 ஜூலை 29]

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் வறட்சிவாய்ந்த தொகுதியாகும். தாராபுரம் நகரத்திற்கு அமராவதி அணையிலிருந்து தண்ணீர் எடுத்துவிட்டால் அங்கே ஒரு மாத காலம் மட்டுமே அந்தத் தண்ணீர் தாராபுரம் நகரத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மீண்டும் நிலத்தடி நீர் வற்றிப் போகிறது. இதன் காரணமாக தாராபுரம் நகரத்திலே ஒரு சிறிய தடுப்பணை கொஞ்சம் செலவில்—இரண்டு இலட்சம் அல்லது மூன்று இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒரு சின்ன அணையாக, ஒரு தடுப்புச் சுவரை—வைத்துவிட்டால் குறைந்தபட்சம் 3 மாத காலங்கள் அந்த நிலத்தடி நீர் மக்களுக்குப் பயனாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட நான் இதுபற்றிக் கூறியிருக்கிறேன், இப்பொழுது தாராபுரம் நகரத்திலே 22 நாளைக்குப் பின்புதான் தண்ணீர் வருகிறது. நாங்கள் லாரி மூலமாகவும் மற்ற வாகனங்கள் மூலமாகவும்தான் மக்களுக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம் என்பது தாங்களும் அறிந்ததே. மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய ஆட்சியிலே தாராபுரம் நகரத்திற்கு ஒரு சிறிய தடுப்பணை கட்டினால் நன்றாக இருக்கும். இதனை நிறைய ஊர் பிரமுகர்களும் மற்றவர்களும்கூட ஆலோசனையாகக் கூறுகிறார்கள். நீண்டநாள் தண்ணீர் பஞ்சத்திற்கும் இது ஒரு வழிவகையாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கனிவுடன் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி செல்வி முருகேசன்.

திருமதி செல்வி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலிருந்துதான் தாராபுரத்திற்கும் எங்களுடைய காங்கேயம் பகுதிக்கும் குடிதண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல எங்கள் பகுதிக்கு அந்த தாராபுரத்திலிருந்து தாளக்கரை என்ற இடத்திற்கருகில்

நாங்கள் இப்போது sump அமைத்து குடிதண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தாளக்கரைக்கு அருகில் இந்தத் தடுப்பணை கட்டினால் தாராபுரத்திலிருந்து காங்கேயம் வரும் வழியிலிருக்கும் அனைத்து வழியோர கிராமங்களுக்கும் காங்கேயத்திற்கும் குடிநீர் கிடைப்பதற்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்பதால் இந்தத் தடுப்பணையைக் கட்டுவதற்கு ஆவன செய்து கொடுக்குமாறு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. ராமராஜ்.

திரு. ச. ராமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவாரம் பகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் பக்கத்தில் ஏறக்குறைய 600 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள பகுதியில், 30 ஆண்டுகளுக்கு முன்பாக இயற்கைச் சீற்றத்தினால் அங்கே இருந்த ஒரு மிகப் பெரிய அணை, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து நீர் வரத்து அதிகமாக இருந்த காரணத்தால், பெரும் வெள்ளத்தால் உடைந்து, இன்று அந்தப் பகுதி மக்கள் வறட்சியின்கீழ் தவிக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பகுதி மக்களினுடைய சார்பாக பணிவான ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். அந்தப் பகுதியும் தங்களுக்குத் தெரிந்த பகுதிதான். 30 ஆண்டுகளுக்கு முன்பாக உடைந்திருக்கின்ற அந்த அணைக்கட்டை மீண்டும் கட்டித் தரும்படி எங்களது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாகத் தரும்பட்சத்தில் அவருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு லா. சந்தானம்.

திரு லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை பகுதியிலே ஓடுகின்ற வைகை ஆற்றிலே மதுரைக்குக் கீழ்புறமாக விரகனூர், பார்த்திபனூர் அணைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. மதுரைக்கு மேற்கே உள்ள பகுதிகளில் குடிநீர் ஆதாரத்திற்காகப் பல்வேறு இடங்களுக்கு, திண்டுக்கல், திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற பகுதிகளுக்கு எல்லாம், குடிநீர் எடுக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் மதுரைக்கு மேற்குப் பகுதியில் மேலக்கால் அருகிலே ஒரு அணைத் திட்டத்தை ஏற்படுத்தித் தந்தால் அது குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதாக அமையும் என்கின்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் நியாயத்தின் அடிப்படையில் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் உள்ள அமராவதி அணையானது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல மேலே 6 அணைகள் கீழே 3 அணைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல அந்த இடத்திற்குச் சரியாக தண்ணீர் செல்வதில்லை என்று இருக்கக்கூடிய நிலையிலே அந்த ஒவ்வோர் அணைக்கட்டும் உலக வங்கித் திட்டத்திலோ அல்லது ஏதாவது ஒரு நிதி ஆதாரத்தின்மூலமோ சரிபார்க்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.